1990 மார்ச் 30]

திரு. ஏ. கோதண்டம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள, குண்டுப் பெரும்பேடு, ஏரையூர், மேட்டுப்பாளையம், பால்நெல்லூர் போன்ற கிராமங்களில் உள்ள பொதுமக்கள், நான் அவர்களைச் சந்திக்கும்போது குடிமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று மனு தந்தார்கள். அதை நான் வட்ட ஆட்சியாளரிடம் தந்து அது காலதாமதம் ஆகிக்கொண்டிருப்பதால் உடனடியாக அவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டதாக நம்புகிறேன். இருந்தாலும் சொல்கிறேன். குண்டுப்பெரும்பேடு, மேட்டுப்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த பட்டாக்கள் அழிந்தும், தொலைந்தும் போன நிலையில் அவர்களின் வீட்டுமனைக்கு அனுபவச் சான்றிதழ் வழங்கினாலே போதும் என செங்கை-அண்ணா மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் தெரிவித்துள்ளார். உரிய அதிகாரிக்குக் கோரிக்கை வந்தவுடன் அவர்களுக்கு அனுபவச் சான்றிதழ் வழங்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வினா எண் 4250. நேற்றே இந்த வினா வந்து, நேற்றைக்கே விடையும் சொல்லப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். இருந்தாலும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விடை சொல்வார்கள். (சிரிப்பு)

கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டத் தீர்வை.

*4250—திரு. துரை ராமசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டத் தீர்வை ரத்து செய்யப்பட வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா ?

9-30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிரமத்திற்கு ஆளாக்கியதற்கு உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு). தண்டத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஆய்வு செய்து அரசாணை (நிலை) எண் 1955 வருவாய், நாள் 6—11—1989 இல் புஞ்சைக்குப் பதிலாக நஞ்சை விளைவித்து அதனால் விதிக்கப்பட்ட அபராதத் தண்ணீர் தீர்வையில் இதுகாறும் நிலுவையிலே உள்ள தொகை

முழுவதையும் தள்ளுபடி செய்துள்ளது. இச்சலுகை முறையற்ற அதாவது வாய்க்கால் உடைத்து பாசனம் செய்வது போன்ற இதர இனங்களுக்குப் பொருந்தாது.

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே விதிக்கப்பட்டிருக்கின்ற அபராதத் தீர்வைதான் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் இந்த அபராதத் தீர்வையை விதிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைப்பற்றி சொல்லி இருக்கிறேன். அரசாங்க ஆதாரத்திலிருந்து அல்லது பாசன ஆதாரத்திலிருந்து வருவாய் பதிவேட்டில் நஞ்சையாக பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அனுசரிக்காது தண்ணீர் பாய்ச்சினாலோ மற்ற எந்த நிலத்திற்கும் தக்க அதிகாரியால் கொடுக்கப்பட்டு இருக்கும் அனுமதி சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அனுசரிக்காமல் தண்ணீர் பாய்ச்சினாலோ ஒரு வாய்க்கால் நீரை தடுத்து நிறுத்துவது அணை கட்டுவது போன்றவற்றால் முறையற்ற நீர்ப்பாசனம் செய்தாலோ ஆணைப் பிறப்பிக்கத்தக்க அதிகாரியின் ஆணைக்கு மாறாக நீரைப் பயன்படுத்தினாலோ அனுமதிக்கப்பட்ட ஆதாரம் மற்றும் தண்ணீர் பாய்ச்சுவதற்கு விதிக்கப்படும் நிபந்தனைகளை மீறி தண்ணீர் பாய்ச்சினாலோ பாசனம் முறையற்றதாகக் கருதப்படுகிறது.

புஞ்சை மற்றும் நஞ்சை நிலத்திற்குச் செய்யும் முறையற்ற நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரை கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கப்படுகிறது :

	புஞ்சை	நஞ்சை
பெரியார் & தாமிரபரணி பாசன பகுதிகளில் :		
முதன் முறை	3 மடங்கு	2 மடங்கு
2வது முறை	6 மடங்கு	5 மடங்கு
3வது முறை	12 மடங்கு	11 மடங்கு
4வது முறை	20 மடங்கு	19 மடங்கு
மற்ற பகுதிகளில் :		
முதல் முறை	2 மடங்கு	1 மடங்கு
2வது முறை	5 மடங்கு	4 மடங்கு
3வது முறை	10 மடங்கு	9 மடங்கு
4வதும் அதற்கு மேலும்	20 மடங்கு	19 மடங்கு

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு தமிழகத்திலே தண்டத் தீர்வை விதிப்பதன் வாயிலாக எவ்வளவு அரசுக்கு வருமானம்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 30]

வருகிறது என்பதோடு, இந்த ஆண்டு இந்த அரசு உத்தரவு வழங்குவதற்கு முன்னால் அங்கே கெடுபிடி வசூல் செய்து கட்டப்பட்டிருக்கின்ற அந்த விவசாயிகளிடமிருந்து வசூல் செய்த தண்டத் தீர்வையை அவர்களுக்கு திருப்பிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைநான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—11—1989ல் இதுகாறும் விதிக்கப்பட்ட தண்ணீர் தீர்வையில் நிலுவையாக உள்ளதொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை படி சலுகை முறையற்ற அதாவது வாய்க்கால் உடைத்து பாசன செய்வது போன்ற இனங்களுக்குப் பொருந்தாது. மேற்காணும் அரசாணைக்கு இணங்கபெரியார் மாவட்டத்தில் பயிர்கட்டுபாடு இனத்தில் நிலுவையாக உள்ள சுமார் 3 கோடி ரூபாய் தள்ளுபடி சலுகைக்கு உட்படுகிறது.

கிராமப்புறங்களில் வீடு கட்டிக்கொள்ள கடன்.

*2380—திரு. ஆர். அண்ணாநம்பி :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளியோருக்கு சொந்தத்தில் வீடு கட்டிக் கொள்ள மானியமும், கடனும் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் அதாவது 1989–90 ஆவது நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இது அமுல்படுத்தப்படும் என்றால் அதாவது கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு நாம் எவ்வளவு கடன் கொடுக்க இருக்கிறோம், எத்தனை ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது, ரூரல் அவுசிங் ஸ்கீம் என்று நாம் ஏற்கெனவே வைத்து இருக்கிறோம். அந்த திட்டத்தின் மூலமாக 31 ஆண்டுகளுக்கு அவர்கள் வில்லங்க சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்று இருக்கிறதே. அதுவும் இன்று கட்டுப்படுத்தப்படுமா அல்லது ரத்து செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.